**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO.126/2024**

**PW. 1**

**Date: 06.05.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ராஜ்குமார் | வயது | 40 |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **06th May 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்கள்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :**

4. நான் குறிப்பிடும் தொழிற்சாலை என்ன தொழிற்சாலை என்றால் ஊதுபத்தி தயார் செய்யும் தொழிற்சாலை. 2010 ஆம் ஆண்டில் இருந்து அந்த தொழிற்சாலை இயங்கி வருகிறது. நான் எப்போதில் இருந்து அங்கு வேலை பார்க்கிறேன் என்றால் 2009 ஆண்டில் இருந்து வேலை பார்க்கிறேன். நான் அப்போது என்ன வேலை செய்தேன் என்றால் மேற்பார்வையாளராக வேலை செய்தேன். தற்போதும் மேற்பார்வையாளராக தான் வேலை பார்க்கிறேன். அந்த தொழிற்சாலையின் உரிமையாளர் சதீஷ்குமார் மற்றும் கமல் குமார். அவர்களின் பெற்றோர் பெயர் தெரியுமா என்றால் சத்திய நாராயணன் – விஜயகுமாரி. நான் தொழிற்சாலையின் மேற்பார்வையாளர் என்பதால் அந்த நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் லாபம் உள்ளிட்ட

அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

5. என்னுடைய பணியின் தன்மை என்னவென்றால் பணியாளர்கள் பணி செய்வதை மேற்பார்வை செய்வேன். மின்சாதனங்கள் பழுது அடைந்தால் அதை சரி செய்யும் வேலை பார்ப்பேன். எதிரிகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியும். எவ்வாறு தெரியும் என்றால் 2010 ஆம் ஆண்டு நடந்த ஒரு வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கில் எதிரிகள் தரப்பினர்கள் என்பதால் எனக்கு தெரியும். அந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் சதீஷ்குமார், கமல்குமார் அவர்கள் எதிரிகளின் மீது தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கின் விவரங்கள் தெரியுமா என்றால் செங்கல்பட்டில் நடந்தது. வழக்கு எண் தெரியாது.

6. நான் என்னுடைய உரிமையாளர் விஜயகுமாரி, சதீஷ்குமார் மற்றும் கமல்குமார் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் வேணடுமென்றே பொய்யாக ஜோடித்து எதிரிகளின் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எப்போது எதிரிகளின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 01/04/2023 அன்று மாலை 06.30 மணிக்கு கொடுத்தேன். புகாரை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். எங்கு எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் எழுதினேன். நான் தனியாக புகாரை எழுதினேனா அல்லது போலிசார் சொன்னதன் பேரில் எழுதினேனா என்றால் நான் தனியாக தான் எழுதினேன்.

7. யார் சொல்லி எதிரிகள் பூட்டை உடைத்த விவரம் தெரிந்தது என்றால் சத்தம் கேட்டு சென்றேன். காவலர்கள் அங்கு இல்லையா என்றால் இல்லை. நுழைவு வாயில்

பூட்டப்பட்டு இருந்ததால் என்றால் ஆமாம். நான் சாட்சியம் அளித்தது போன்று எதிரிகள் எங்கள் கம்பெனிக்கு வரவில்லை என்றாலும் பூட்டை உடைக்கவில்லை என்றாலும் எதிரிகளின் இடம் எங்கள் கம்பெனியில் இருந்து 600 மீட்டர் தள்ளி தான் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. கம்பெனிக்கு சேதம் ஏற்பட்டதா என்றால் நுழைவு வாயில் தாழ்பாள் சேதம் ஏற்பட்டு இருந்தது. எதிரிகள் எதை வைத்து பூட்டை உடைத்தார்கள் என்பதற்கு ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. நான் செல்லும் போது எதிரிகள் கைகளில் ஏதேனும் வைத்து இருந்தார்களா என்றால் அருகில் இரும்பு ராடு இருந்தது. நான் அங்கு சென்றபோது என்ன பார்த்தேன் என்றால் பூட்டு உடைந்து இருந்தது. எதிரிகளின் கால்களுக்கு அடியில் ராடு கிடந்தது. அந்த உடைந்த பூட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் தொழிற்சாலையின் உரிமையாளர்களுக்கும் எதிரிகளுக்கு இடையே செங்கல்பட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்கள். 35, 36, 37 /2010 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் இருந்து வரும் முன்விரோதம் காரணமாக என் மூலமாக நடைபெறாத ஒரு சம்பவத்திற்கு எதிரிகளின் மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் நான் சாட்சியம் அளித்தது போன்று ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

9. எங்கள் உரிமையாளர்கள் விஜயகுமாரி, கமல் குமார் மற்றும் சதீஷ்குமார் ஆகியோரின் பெயர்களில் குற்ற வழக்குகளும் உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும் எங்கள் தொழிற்சாலைக்கு அருகில் எதிரிகளுக்கு சொந்தமான

சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என் மூலமாக இப்பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.